# திருவேங்கடமுடையான்

664

விஷயமான

# ஆழ்வார்களின் அருளிச் செயல்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அன்பளிப்பு
664
(7045)
XI. E. 16.

குன்றுமேந்திக் குளிர்மழை காத்தவன்
அன்றுஞாலம் அளந்தபிரான் பரன்
சென்றுசேர் திருவேங்கடமாமலை
ஒன்றுமேதொழ நம்வினையோயுமே.

திருமலை-திருப்பதி தேவஸ்தான கமிட்டியாரின் ஏற்பாட்டின்படி

கமிஷனர்:

A. ஜெயராம் நாயுடு B.A., அவர்களால் பிரசுரிக்கப்பட்டது

1917.

PRINTED AT
T. T. D. PRESS,
TIRUPATI.
Copies 5000
26-8-'47.

# முகவுரை.

வேதாகமங்களால் சருவேசுவரன் என்று நுணியப்படும் ஸ்ரீமந் நாராயணனுடைய ஸ்வரூபம் பரம், வியூஹம், அந்தர்யாமி, விபவம், அர்ச்சை ஆகிய ஐந்து நிலைமைகளாம் என்றும் அவற்றுள் அர்ச்சையே சேதனர்கள் அறிந்து பக்தி செய்து உய்வு பெறுதற்கு உரியது என்றும் பூர்வர்கள் அறுதியிட்டுள்ளார்கள். எம்பெருமான் தனது அளவிறந்த கருணை விலாஸத்தாலே திவ்ய மங்களத் திருமேனி கொண்டு நம் நாட்டிலுள்ள பல திருப்பதிகளிலும் எழுந்தருளி யிருக்கின்ற இயல்பே இவ்வர்ச்சாவதாரம் என்பது. பிரபத்தி செய்யும் பிரபன்னர்க்கு அந்தமில் நலம் அருளுவது இதுவே என்பது பெரியோர்களின் திருவுள்ளம்.

"ஆழ்வார்கள் பலவிடங்களிலும் ப்ரபத்தி பண்ணிற்றும் அர்ச்சாவதாரத்திலே"—"ப்ரபத்திக்கு அபேக்ஷிதங்களான ஸௌலப்யாதிகள் இருட்டறையில் விளக்குப் போலே பிரகாசிப்பது இங்கே"—"பூர்த்தியையும் ஸ்வாதந்திரியத்தையும் குலைத்துக் கொண்டு தன்னை அநாதரிக்கிறவர்களைத் தான் ஆதரித்து நிற்கிற இடம்."—"பூகத ஜலம் போலே அந்தரியாமித்வம்; ஆவரண ஜலம் போலே பரத்வம்; பாற்கடல் போலே வ்யூஹம்; பெருக்காறு

போலே விபவங்கள்; அதிலே தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்" என்று உதயமான ஸ்ரீ வசனபூஷண மூலஸூக்திகள் இங்கு விமர்ஸிக்கத் தக்கன.

ஆகவே இவ்வைபவ மிக்க அர்ச்சாவதாரங்கள் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் நூற்றெட்டுள் முதன்மையுள்ளனவாக ஸ்ரீ வைஷ்ணவர்களால் கொண்டாடப்படுகின்றவை "கோயில் திருமலை பெருமாள் கோயில்" என்ற மூன்றுமே ஆகும். இம்முறை ஆழ்வார்களுள் தலைமையான நம்மாழ்வார் தாம் அருளிய நான்கு திருப்பிரபந்தங்களுள் முதன்மையானதாகிய திருவிருத்தத்துள் திருவரங்கம், திருவேங்கடம், திருக்கச்சி வெஃகா ஆகிய இம்மூன்று திருப்பதிகளையுமே தம்முடைய அநுபவத்துக்கு உரிமையாக்கியருளியது பற்றி என்பர் பெரியோர். ஆதலின் இம் மூன்றனுள் நடுநாயகமாக விளங்கும் திருவேங்கடம் என்ற திருமலையில் எழுந்தருளிய எம்பெருமான் திருவேங்கடமுடையானுடைய திருவடிப் பற்று பக்தர்களுக்கு மிக மிக இன்பமும் நலமும் என்றென்றும் அளிப்பது என்பது தேற்றம். ஆதலின் இத் திருமலையில் எழுந்தருளியுள்ள எம்பெருமான் விஷயத்தில் ஆழ்வார்களின் பகவதநுபவபரமாய் எழுந்த திருப்பாசுரங்கள் அனைத்தையும் தொகுத்துப் பக்த கோடிகளின் அநுஸந்தானத்துக்குப் பயன்படுமாறு செய்யலாயிற்று.

## கட்டளைக் கலித்துறை.

கூனியன்று போனவன் றனிமிர்ந் தோடக் குருடன்கொம்பிற்
பேனென்று காட்ட முடவன் குடங்கொண்டுத் தேன்பிழியத்
தானின்ற வூமை தனக்கென்று கேட்கத் தருவார்வாழ்
வானின்ற சோலை புடைசூழ் வடமலை மாயவரே.

மலையப்பஸ்வாமி.

ஸ்ரீ



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## காப்பு.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
செவ்வடி செவ்விதிருக் காப்பு.

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி.

## 3-ம் பத்து 3-ம் திருவாய்மொழி.

*ஒழிவில்காலமெல்லாம் உடனாய்மன்னி*
*வழுவிலா அடிமைசெய்யவேண்டும்நாம்*
*தெழிகுரலருவித் திருவேங்கடத்து*
*எழில்கொள்சோதி எந்தைதந்தைதந்தைக்கே.* 1

*எந்தைதந்தைதந்தை தந்தைதந்தைக்கும்*
*முந்தை வானவர் வானவர்கோனொடும்*
*சிந்துபூமகிழும் திருவேங்கடத்து*
*அந்தமில்புகழ்க் காரெழிலண்ணலே.* 2

*அண்ணல்மாயன் அணிகொள்செந்தாமரைக்*
*கண்ணன் செங்கனிவாய்க் கருமாணிக்கம்*
*தெண்ணிறைச்சுனைநீர்த் திருவேங்கடத்து*
*எண்ணில்தொல்புகழ் வானவரீசனே.* 3

ஈசன்வானவர்க்கென்பன் என்றால் அது
தேசமோ திருவேங்கடத்தானுக்கு?
நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்கண்
பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே. 4

சோதியாகி எல்லாவுலகும்தொழும்
ஆதிமூர்த்தியென்றால் அளவாகுமோ?
வேதியர் முழுவேதத்தமுதத்தைத்
தீதில்சீர்த் திருவேங்கடத்தானையே. 5

வேங்கடங்கள் மெய்ம்மேல்வினைமுற்றவும்
தாங்கள்தங்கட்கு நல்லனவேசெய்வார்
வேங்கடத்துறைவார்க்கு நமவென்னல்
ஆம்கடமை அதுசுமந்தார்கட்கே. 6

சுமந்துமாமலர் நீர்சுடர்தூபம்கொண்டு
அமர்ந்துவானவர் வானவர்கோனொடும்
நமன்றெழும் திருவேங்கடம்நங்கட்குச்
சமன்கொள்வீடுதரும் தடங்குன்றமே. 7

குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன்
அன்றுஞாலம் அளந்தபிரான் பரன்
சென்றுசேர் திருவேங்கடமாமலை
ஒன்றுமேதொழ நம்வினைஓயுமே. 8

ஓயும்மூப்புப் பிறப்புஇறப்புப்பிணி
வீயுமாறுசெய்வான் திருவேங்கடத்து
ஆயன் நாள்மலராம் அடித்தாமரை
வாயுள்ளும்மனத்துள்ளும் வைப்பார்கட்கே. 9

வைத்தநாள்வரை எல்லைகுறுகிச்சென்று
எய்த்திளைப்பதன்முன்னம் அடைமினோ
பைத்தபாம்பணையான் திருவேங்கடம்
மொய்த்தசோலை மொய்பூந்தடம்தாழ்வரே. 10

தாள்பரப்பி மண்தாவிய ஈசனை
நீள்பொழில் குருகூர்ச்சட கோபன்சொல்
கேழிலாயிரத்து இப்பத்தும் வல்லவர்
வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம்புகழவே. 11

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## 6-ம் பத்து 10-ம் திருவாய்மொழி.

உலக முண்ட பெருவாயா! உலப்பில் கீர்த்தி யம்மானே!
நிலவும் சுடர்சூ ழொளிமூர்த்தி! நெடியாய்! அடியேன் ஆருயிரே!
திலத முலகுக் காய்நின்ற திருவேங் கடத்தெம் பெருமானே!
குலதொல் லடியேன் உனபாதம் கூடு மாறு கூறாயே. 1

கூறாய் நீறாய் நிலனாகிக் கொடுவல் லசுரர் குலமெல்லாம்
சீறா எறியும் திருநேமி வலவா! தெய்வக் கோமானே!
சேறார் சுனைத்தா மரைசெந்தீ மலரும் திருவேங் கடத்தானே!
ஆறா வன்பி லடியேன்உன் னடிசேர் வண்ணம் அருளாயே. 2

வண்ண மருள்கொ ளணிமேக வண்ணா! மாய வம்மானே!
எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே! இமையோ ரதிபதியே!
தெண்ண லருவி மணிபொன்முத் தலைக்கும் திருவேங் கடத்தானே!
அண்ணலே! உன் னடிசேர அடியேற்கு ஆவா வென்னாயே. 3

ஆவா! என்னா துலகத்தை யலைக்கும் அசுரர் வாணாள்மேல்
தீவாய் வாளி மழைபொழிந்த சிலையா! திருமாமகள் கேள்வா!
தேவா சுரர்கள் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங் கடத்தானே!
பூவார் கழல்கள் அருவினையேன் பொருந்து மாறு புணராயே. 4

புணரா நின்ற மரமேழ் அன்றெய்த ஒருவில் வலவாவோ !
புணரேய் நின்ற மரமிரண்டின் நடுவே போன முதல்வாவோ !
திணரார் மேக மெனக்களிறு சேரும் திருவேங் கடத்தானே !
திணரார் சார்ங்கத்து உனபாதம் சேர்வ தடியே னெந்நாளே ? 5

எந்நாளே ? நாம் மண்ணளந்த இணைத்தாமரைகள் காண்ப தற்கென்று
எந்நாளும் நின்று இமையோர்க ளேத்தி இறைஞ்சி இனமினமாய்
மெய்ந்நா மனத்தால் வழிபாடு செய்யும் திருவேங் கடத்தானே !
மெய்ந்நா னெய்தி எந்நாள் உன்னடிக்கண் அடியேன் மேவுவதே ? 6

அடியேன் மேவி யமர்கின்ற அமுதே ! இமையோ ரதிபதியே !
கொடியா வடுபுள் ளுடையானே ! கோலக் கனிவாய்ப் பெருமானே !
செடியார் வினைகள் தீர்மருந்தே ! திருவேங் கடத்தெம் பெருமானே !
நொடியார் பொழுதும் உனபாதம் காண நோலா தாற்றேனே. 7

நோலா தாற்றேன் உனபாதம் காண வென்று நுண் ணுணர்வின்
நீலார் கண்டத் தம்மானும் நிறைநான் முகனும் இந்திரனும்
சேலேய் கண்ணார் பலர்சூழ விரும்பும் திருவேங் கடத்தானே
மாலாய் மயக்கி அடியேன்பால் வந்தாய் போலே வாராயே. 8

வந்தாய் போலே வாராதாய் வாராதாய் போல் வருவானே!
செந்தா மரைக்கண் செங்கனிவாய் நால்தோ ளமுதே! எனதுயிரே!
சிந்தா மணிகள் பகரல்லைப் பகல்செய் திருவேங் கடத்தானே!
அந்தோ! அடியேன் உனபாதம் அகல கில்லேன் இறையுமே. 9

அகல கில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா!
நிகரில் புகழாய்! உலகம் மூன்றுடையாய்! என்னையாள் வானே!
நிகரி லமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங் கடத்தானே!
புகலொன் றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே. 10

அடிக்கீ ழமர்ந்துபுகுந்து அடியீர்! வாழ்மி னென்றென் றருள்கொடுக்கும்
படிக்கே ழில்லாப் பெருமானைப் பழனக் குருகூர்ச் சடகோபன்
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத் திருவேங் கடத்துக் கிவைபத்தும்
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரிய வானுள் நிலாவுவரே. 11

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

# குலசேகரப் பெருமாள் அருளிச்செய்த பெருமாள் திருமொழி.

## 4-ம் திருமொழி.

ஊனேறு செல்வத்து உடற்பிறவி யான்வேண்டேன்
ஆனேறேழ் வென்றான் அடிமைத் திறமல்லால்
கூனேறு சங்க மிடத்தான்தன் வேங்கடத்துக்
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே. 1

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே. 2

பின்னிட்ட சடையானும் பிரமனும் இந்திரனும்
துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல்
மின்வட்டச் சுடராழி வேங்கடக்கோன் தானுமிழும்
பொன்வட்டில் பிடித்து உடனே புகப்பெறுவேனாவேனே. 3

ஒண்பவள வேலை யுலவுதண் பாற்கடலுள்
கண்துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்குப்
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துச்
செண்பகமாய் நிற்கும் திருவுடையெ னாவேனே. 4

கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேலிருந்து
இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்
எம்பெருமான் ஈசன் எழில்வேங் கடமலைமேல்
தம்பகமாய் நிற்கும் தவமுடையெ னாவேனே. 5

மின்னனைய நுண்ணிடையார் உருப்பசியும் மேனகையும்
அன்னவர்தம் பாடலொடும் ஆடலவை ஆதரியேன்
தென்னவென வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துள்
அன்னனைய பொற்குவடாம் அருந்தவத்தெ னாவேனே. 6

வானாளு மாமதிபோல் வெண்குடைக்கீழ் மன்னவர்தம்
கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்
தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடமலைமேல்
கானாறாய்ப் பாயும் கருத்துடையெ னாவேனே. 7

பிறையேறு சடையானும் பிரமனும் இந்திரனும்
முறையாய வேள்விக் குறைமுடிப்பான் மறையானான்
வெறியார்தண் சோலைத் திருவேங் கடமலைமேல்
நெறியாய்க் கிடக்கும் நிலையுடையே னாவேனே. 8

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே. 9

உம்பருல காண்டு ஒருகுடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொற் கலையல்குல் பெற்றாலும் ஆதரியேன்
செம்பவள வாயான் திருவேங் கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனு மாவேனே. 10

மன்னியதண் சாரல் வடவேங் கடத்தான்தன்
பொன்னியலும் சேவடிகள் காண்பான் புரிந்திறைஞ்சிக்
கொன்னவிலும் கூர்வேல் குலசே கரன்சொன்ன
பன்னியநூல் தமிழ்வல்லார் பாங்காய பத்தர்களே. 11

குலசேகரப் பெருமாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

# ஆண்டாள் அருளிச்செய்த நாச்சியார் திருமொழி.

## 8-ம் திருமொழி.

விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள் !
தெண்ணீர்ப்பாய் வேங்கடத்துஎன் திருமாலும் போந்தானே ?
கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளிசோரச் சோர்வேனைப்
பெண்ணீர்மை யீடழிக்கும் இதுதமக்குஓர் பெருமையே. 1

மாமுத்த நிதிசொரியும் மாமுகில்காள் ! வேங்கடத்துச்
சாமத்தி னிறங்கொண்ட தாடாளன் வார்த்தையென்ன ?
காமத்தீ யுள்புகுந்து கதுவப்பட்டு இடைக்கங்குல்
எமத்தோர் தென்றலுக்கு இங்கிலக்காய் நானிருப்பேனே. 2

ஒளிவண்ணம் வளைசிந்தை உறக்கத்தோடு இவையெல்லாம்
எளிமையால் இட்டுஎன்னை ஈடழியப் போயினவால்
குளிரருவி வேங்கடத்துஎன் கோவிந்தன் குணம்பாடி
அளியத்த மேகங்காள் ! ஆவிகாத் திருப்பேனே. 3

மின்னாகத் தெழுகின்ற மேகங்காள் ! வேங்கடத்துத்
தன்னாகத் திருமங்கை தங்கியசீர் மார்வற்கு
என்னாகத் திளங்கொங்கை விரும்பித்தாம் நாள்தோறும்
பொன்னாகம் புல்குதற்குஎன் புரிவுடைமை செப்புமினே. 4

வான்கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள் வேங்கடத்துத்
தேன்கொண்ட மலர்சிதறத் திரண்டேறிப் பொழிவீர்காள் !
ஊன்கொண்ட வள்ளுகிரால் இரணியனை உடலிடந்தான்
தான்கொண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே. 5

சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில்காள் ! மாவலியை
நிலங்கொண்டான் வேங்கடத்தே நிரந்தேறிப் பொழிவீர்காள் !
உலங்குண்ட விளங்கனிபோல் உள்மெலியப் புகுந்துஎன்னை
நலங்கொண்ட நாரணற்குஎன் நடலைநோய் செப்புமினே. 6

சங்கமா கடல்கடைந்தான் தண்முகில்காள் ! வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக்கீழ் அடிவீழ்ச்சி விண்ணப்பம்
கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்துஒருநாள்
தங்குமேல் என்னாவி தங்குமென்று உரையீரே. 7

கார்காலத் தெழுகின்ற கார்முகில்காள்! வேங்கடத்துப்
போர்காலத் தெழுந்தருளிப் பொருதவனார் பேர்சொல்லி
நீர்காலத்து எருக்கினம் பழவிலைபோல் வீழ்வேனை
வார்காலத்து ஒருநாள்தம் வாசகம்தந் தருளாரே. 8

மதயானை போலெழுந்த மாமுகில்காள்! வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்! பாம்பணையான் வார்த்தையென்னே!
கதியென்றும் தானாவான் கருதாதோர் பெண்கொடியை
வதைசெய்தா னென்னும்சொல் வையகத்தார் மதியாரே. 9

நாகத்தி னணையானை நன்னுதலாள் நயந்துரைசெய்
மேகத்தை வேங்கடக்கோன் விடுதூதில் விண்ணப்பம்
போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதைதமிழ்
ஆகத்து வைத்துரைப்பா ரவர்அடியா ராகுவரே. 10

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

MAHAMAHOPADHYAYA
. U.V. SW...NATHA IYER LIBRARY
SANT NAGAR, MADRAS-600 090

ஸ்ரீ

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி.

## 1-ம் பத்து 8-ம் திருமொழி.

*கொங்கலர்ந்த மலர்க்குருந்தம் ஒசித்தகோவலன் எம்பிரான்*
*சங்குதங்கு தடங்கடல் துயில் கொண்ட தாமரைக் கண்ணினன்*
*பொங்குபுள்ளினை வாய்பிளந்த புராணர்தம்மிடம் பொங்குநீர்ச்*
*செங்கயல் திளைக்கும்சுனைத் திருவேங்கடம் அடைநெஞ்சமே!* 1

*பள்ளியாவதுபாற்கடல்அரங்கம் இரங்கவன்பேய்முலை*
*பிள்ளையாய்உயிருண்டஎந்தை பிரானவன்பெருகுமிடம்*
*வெள்ளியான்கரியான் மணிநிறவண்ணனென்றெண்ணி நாள்தொறும்*
*தெள்ளியார்வணங்கும்மலைத் திருவேங்கடம்அடை நெஞ்சமே!* 2

*நின்றமாமருதுஇற்றுவீழ நடந்தநின்மலன்நேமியான்*
*என்றும்வானவர்கைதொழும் இணைத்தாமரையடியெம்பிரான்*
*கன்றிமாரிபொழிந்திடக் கடிதாநிரைக்குஇடர்நீக்குவான்*
*சென்றுகுன்றமெடுத்தவன் திருவேங்கடம்அடைநெஞ்சமே!* 3

பார்த்தற்காய்அன்றுபாரதம்கைசெய்திட்டு வென்றபரஞ்சுடர்
கோத்துஅங்குஆயர்தம்பாடியில் குரவைபிணைந்தஎம்கோவலன்
ஏத்துவார்தம்மனத்துள்ளான் இடவெந்தைமேவியஎம்பிரான்
தீர்த்தநீர்த்தடஞ்சோலைசூழ் திருவேங்கடம்அடைநெஞ்சமே! 4

வண்கையான்அவுணர்க்குநாயகன் வேள்வியில்சென்று மாணியாய்
மண்கையால்இரந்தான் மராமரமேழும்எய்தவலத்தினன்
எண்கையான்இமயத்துள்ளான் இருஞ்சோலைமேவியஎம்பிரான்
திண்கைம்மாதுயர்தீர்த்தவன் திருவேங்கடம்அடைநெஞ்சமே! 5

எண்திசைகளும்ஏழுலகமும்வாங்கிப் பொன்வயிற்றில்பெய்து
பண்டுஓராலிலைப்பள்ளிகொண்டவன் பால்மதிக்குஇடர்தீர்த்தவன்
ஒண்திறலவுணனுரத்துகிர்வைத்தவன் ஒள்ளெயிற்றொடு
திண்திறலரியாயவன் திருவேங்கடம்அடைநெஞ்சமே! 6

பாரும்நீர்எரிகாற்றினோடு ஆகாசமும்இவையாயினன்
பேரும்ஆயிரம்பேசநின்ற பிறப்பிலிபெருகுமிடம்
காரும்வார்பனிநீள்விசும்பிடைச் சோருமாமுகில்தோய்தரச்
சேரும்வார்பொழில்சூழ் எழில்திருவேங்கடம்அடைநெஞ்சமே! 7

அம்பரம்அனல்கால்நிலம் சலமாகிநின்றஅமரர்கோன்
வம்புலாமலர்மேல் மலிமடமங்கைதன்கொழுநனவன்
கொம்பினன்னஇடைமடக்குறமாதர் நீளிதணந்தொறும்
செம்புனம்மவைகாவல்கொள் திருவேங்கடம்அடைநெஞ்சமே! 8

பேசுமின்திருநாமம்எட்டெழுத்தும் சொல்லிநின்று பின்னரும்
பேசுவார்தமைஉய்யவாங்கிப் பிறப்பறுக்கும்பிரானிடம்
வாசமாமலர்நாறுவார்பொழில் சூழ்தரும்உலகுக்கெலாம்
தேசமாய்த்திகழும்மலைத் திருவேங்கடம்அடைநெஞ்சமே! 9

செங்கயல்திளைக்குஞ்சுனைத் திருவேங்கடத்துஉறைசெல்வனை
மங்கையர்தலைவன்கலிகன்றி வண்தமிழ்ச்செஞ்சொல்மாலைகள்
சங்கையின்றித்தரித்துஉரைக்கவல்லார்கள் தஞ்சமதாகவே
வங்கமாகடல்வையம்காவலராகி வானுலகாள்வரே. 10

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

## 1-ம் பத்து 9-ம் திருமொழி.

தாயேதந்தையென்றும் தாரமேகிளைமக்களென்றும்
நோயேபட்டொழிந்தேன் நுன்னைக்காண்பதோராசையினால்
வேயேய்பூம்பொழில்சூழ் விரையார்திருவேங்கடவா!
நாயேன்வந்துஅடைந்தேன் நல்கிஆளென்னைக்கொண்டருளே. 1

மானேய்கண்மடவார் மயக்கில்பட்டு மாநிலத்து
நானேநானாவிதநரகம்புகும் பாவம்செய்தேன்
தேனேய்பூம்பொழில்சூழ் திருவேங்கடமாமலை என்
ஆனாய்! வந்தடைந்தேன் அடியேனைஆட்கொண்டருளே. 2

கொன்றேன்பல்லுயிரைக் குறிக்கோளொன்றிலாமையினால்
என்றேனும்இரந்தார்க்கு இனிதாகஉரைத்தறியேன்
குன்றேய்மேகமதிர் குளிர்மாமலைவேங்கடவா!
அன்றேவந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 3

குலந்தானெத்தனையும் பிறந்தேயிறந்தெய்த்தொழிந்தேன்
நலந்தானொன்றுமிலேன் நல்லதோரறம்செய்துமிலேன்
நிலம்தோய்நீள்முகில்சேர் நெறியார்திருவேங்கடவா!
அலந்தேன்வந்தடைந்தேன் அடியேனைஆட்கொண்டருளே. 4

எப்பாவம்பலவும் இவையேசெய்துஇளைத்தொழிந்தேன்
துப்பா ! நின்னடியே தொடர்ந்தேத்தவுங்கிற்கின்றிலேன்
செப்பார்திண்வரைசூழ் திருவேங்கடமாமலை என்
அப்பா ! வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 5

மண்ணாய்நீரெரிகால் மஞ்சுலாவும்ஆகாசமுமாம்
புண்ணாராக்கைதன்னுள் புலம்பித்தளர்ந்தெய்த்தொழிந்தேன்
விண்ணார்நீள்சிகர விரையார்திருவேங்கடவா !
அண்ணா ! வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 6

தெரியேன்பாலகனாய்ப் பலதீமைகள்செய்துமிட்டேன்
பெரியேனாயினபின் பிறர்க்கேயுழைத்தேழையானேன்
கரிசேர்பூம்பொழில்சூழ் கனமாமலைவேங்கடவா !
அரியே ! வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 7

தோற்றேன்பல்பிறவி நுன்னைக்காண்பதோராசையினால்
ஏற்றேன் இப்பிறப்பே இடருற்றனன்எம்பெருமான்
கோல்தேன்பாய்ந்தொழுகும் குளிர்சோலைசூழ்வேங்கடவா !
ஆற்றேன்வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண்டருளே. 8

பற்றேல்ஒன்றுமிலேன் பாவமேசெய்துபாவியானேன்
மற்றேலொன்றறியேன் மாயனே! எங்கள்மாதவனே!
கல்தேன்பாய்ந்தொழுகும் கமலச்சுனைவேங்கடவா!
அற்றேன்வந்தடைந்தேன் அடியேனைஆட்கொண்டருளே. 9

கண்ணாய்ஏழுலகுக்குஉயிராய எங்கார்வண்ணனை
விண்ணோர்தாம்பரவும் பொழில்வேங்கடவேதியனை
திண்ணார்மாடங்கள்சூழ் திருமங்கையர்கோன்கலியன்
பண்ணார்பாடல்பத்தும் பயில்வார்க்குஇல்லைபாவங்களே. 10

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

## 1-ம் பத்து 10-ம் திருமொழி.

கண்ணார்கடல்சூழ் இலங்கைக்கு இறைவன்தன்
திண்ணா கம்பிளக்கச் சரம்செல உய்த்தாய்!
விண்ணோர் தொழும் வேங்கடமா மலைமேய
அண்ணா! அடியே னிடரைக் களையாயே. 1

இலங்கைப் பதிக்கு அன்று இறையாய அரக்கர்
குலம்கெட்டு அவர்மாளக் கொடிப்புள் திரித்தாய் !
விலங்கல் குடுமித் திருவேங்க டம்மேய
அலங்கல் துளப முடியாய் ! அருளாயே. 2

நீரார் கடலும் நிலனும் முழுதுண்டு
ஏரால மிளந்தளிர் மேல் துயில் எந்தாய் !
சீரார் திருவேங்கட மாமலை மேய
ஆரா வமுதே ! அடியேற்கு அருளாயே. 3

உண்டாய் உறிமேல் நறுநெய் அமுதாகக்
கொண்டாய் குறளாய் நிலம் ஈரடி யாலே
விண்தோய் சிகரத் திருவேங்க டம்மேய
அண்டா ! அடியேனுக்கு அருள்புரி யாயே. 4

தூணாய்அதனூடு அரியாய்வந்து தோன்றிப்
பேணாஅவுணனுடலம் பிளந்திட்டாய் !
சேணார்திருவேங்கட மாமலைமேய
கோணாகணையாய் ! குறிக்கொள்ளெனைநீயே. 5

மன்னா இம்மனிசப்பிறவியைநீக்கித்
தன்னாக்கித் தன்இன்னருள்செய்யும்தலைவன்
மின்னார்முகில்சேர் திருவேங்கடம்மேய
என்னானைஎன்னப்பன் என்நெஞ்சிலுளானே. 6

மானேய்மடநோக்கிதிறத்து எதிர்வந்த
ஆனேழ்விடைசெற்ற அணிவரைத்தோளா!
தேனே! திருவேங்கடமாமலைமேய
கோனே! என்மனம் குடிகொண்டிருந்தாயே. 7

சேயன்அணியன் என்சிந்தையுள்நின்ற
மாயன் மணிவாளொளி வெண்தரளங்கள்
வேய்விண்டுஉதிர் வேங்கடமாமலைமேய
ஆயனடியல்லது மற்றறியேனே. 8

வந்தாய்என்மனம்புகுந்தாய் மன்னிநின்றாய்!
நந்ாதகொழுஞ்சுடரே! எங்கள்நம்பீ!
சிந்தாமணியே! திருவேங்கடம்மேய
எந்தாய்! இனியான்உன்னை என்றும்விடேனே. 9

வில்லார்மலி வேங்கடமாமலைமேய
மல்லார்திரள்தோள் மணிவண்ணனம்மானைக்
கல்லார்திரள்தோள் கலியன்சொன்னமாலை
வல்லாரவர் வானவராகுவர்தாமே. 10

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

## 2-ம் பத்து 1-ம் திருமொழி.

வானவர்தங்கள்சிந்தைபோல என்னெஞ்சமே! இனிதுவந்து மாதவ
மானவர்தங்கள்சிந்தை அமர்ந்துறைகின்றஎந்தை
கானவரிடுகாரகில்புகை ஓங்குவேங்கடம்மேவி மாண்குற
ளான அந்தணற்கு இன்றுஅடிமைத்தொழில்பூண்டாயே. 1

உறவுசுற்றமென்றொன்றிலா ஒருவன்உகந்தவர்தம்மைமண்மிசைப்
பிறவியேகெடுப்பான் அதுகண்டுஎன்னெஞ்சமென்பாய்!
குறவர்மாதர்களோடு வண்டுகுறிஞ்சிமருளிசைபாடும்வேங்கடத்து
அறவனாயகற்கு இன்றுஅடிமைத்தொழில்பூண்டாயே. 2

இண்டையாயினகொண்டு தொண்டர்களேத்துவாருறவோடும் வானிடைக்
கொண்டுபோயிடவும் அதுகண்டுஎன்நெஞ்சமென்பாய் !
வண்டுவாழ்வடவேங்கடமலை கோயில்கொண்டதனோடும்மீமிசை
அண்டமாண்டிருப்பாற்கு அடிமைத்தொழில்பூண்டாயே. 3

பாவியாதுசெய்தாய்என்நெஞ்சமே ! பண்டுதொண்டுசெய்தாரை மண்மிசை
மேவிஆட்கொண்டுபோய் விசும்பேறவைக்கும்எந்தை
கோவிநாயகன்கொண்டலுந்துயர் வேங்கடமலையாண்டு வானவர்
ஆவியாயிருப்பாற்கு அடிமைத்தொழில்பூண்டாயே. 4

பொங்குபோதியும்பிண்டியும்முடைப் புத்தர்நோன்பியர்பள்ளியுள்ளுறை
தங்கள்தேவரும்தாங்களுமேயாக என்நெஞ்சமென்பாய் !
எங்கும்வானவர்தானவர்நிறைந்தேத்தும் வேங்கடம்மேவிநின்றருள்
அங்கணாயகற்கு இன்றுஅடிமைத்தொழில்பூண்டாயே. 5

துவரியாடையர் மட்டையர் சமண்தொண்டர்கள்மண்டி யுண்டுபின்னரும்
தமரும்தாங்களுமேதடிக்க என்நெஞ்சமென்பாய் !
கவரிமாக்கணம்சேரும் வேங்கடம்கோயில்கொண்டகண்ணார் விசும்பிடை
அமரநாயகற்கு இன்றுஅடிமைத்தொழில்பூண்டாயே. 6

MAHAMAHOPADHYAYA
U.V. SWAMINATHA IYER LIBRARY

தருக்கினால்சமண்செய்து சோறுதண் தயிரினால்திரளைமிடற்றிடை
நெருக்குவாரலக்கணது கண்டு என்னெஞ்சமென்பாய் !
மருட்கள்வண்டுகள்பாடும் வேங்கடம்கோயில்கொண்டதனோடும் வானிடை
அருக்கன்மேவிநிற்பார்க்கு அடிமைத்தொழில் பூண்டாயே. 7
சேயன் அணியன்சிறியன்பெரியனென்பதும் சிலர்பேசக் கேட்டிருந்
தே என்னெஞ் மென்பாய் ! எனக்குஒன்றுசொல்லாதே
வேய்கள்நின்றுவெண்முத்தமேசொரி வேங்கடமலைகோயில்மேவிய
ஆயர்நாயகற்கு இன்றுஅடிமைத்தொழில்பூண்டாயே. 8
கூடியாடியுரைத்ததேஉரைத்தாய் என்னெஞ்சமென்பாய் ! துணிந்துகேள்
பாடியாடிப்பலரும் பணிந்தேத்திக்காண்கிலர்
ஆடுதாமரையோனும் ஈசனும் அமரர்கோனும் நின்றேத்தும் வேங்கடத்து
ஆடுகூத்தனுக்கு இன்றுஅடிமைத்தொழில்பூண்டாயே. 9
மின்னுமாமுகில்மேவு தண்திருவேங்கடமலைகோயில்மேவிய
அன்னமாய்நிகழ்ந்த அமரர்பெருமானைக்
கன்னிமாமதிள்மங்கையர்கலிகன்றி இன்தமிழாலுரைத்தஇம்
மன்னுபாடல்வல்லார்க்கு இடமாகும்வானுலகே. 10

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

# தனிப்பாசுரங்கள்.

## பொய்கையாழ்வார் அருளிச்செய்த முதல் திருவந்தாதி.

எழுவார் விடைகொள்வார் ஈன்துழா யானை
வழுவா வகைநினைந்து வைகல்—தொழுவார்
வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடமே வானோர்
மனச்சுடரைத் தூண்டும் மலை. 26

வகையறு நுண்கேள்வி வாய்வார்கள் நாளும்
புகைவிளக்கும் பூம்புனலும் ஏந்தித்—திசைதிசையின்
வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடமே வெண்சங்கம்
ஊதியவாய் மாலுகந்த வூர். 37

ஊரும் வரியரவம் ஒண்குறவர் மால்யானை
பேர வெறிந்த பெருமணியைக்—காருடைய
மின்னென்று புற்றடையும் வேங்கடமே மேலசுரர்
எம்மென்னு மால திடம். 38

இடந்தது பூமி எடுத்தது குன்றம்
கடந்தது கஞ்சனைமுன் னஞ்சக்—கிடந்ததுவும்
நீரோத மாகடலே நின்றதுவும் வேங்கடமே
பேரோத வண்ணர் பெரிது. 39

பெருவில் பகழிக் குறவர்கைச் செந்தீ
வெருவிப் புனம்துறந்த வேழம்—இருவிசும்பில்
மீன்வீழக் கண்டுஅஞ்சும் வேங்கடமே மேலசுரர்
கோன்வீழக் கண்டுகந்தான் குன்று. 40

உணர்வாரார் உன்பெருமை? ஊழிதோ றூழி
உணர்வாரார் உன்னுருவந் தன்னை?—உணர்வாரார்?
விண்ணகத்தாய்! மண்ணகத்தாய்! வேங்கடத்தாய்! நால்வேதப்
பண்ணகத்தாய்! நீகிடந்த பால். 68

வழிநின்று நின்னைத் தொழுவார் வழுவா
மொழிநின்ற மூர்த்தியரே யாவர்—பழுதொன்றும்
வாராத வண்ணமே விண்கொடுக்கும் மண்ணளந்த
சீரான் திருவேங் கடம். 76

வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும்—நான்கிடத்தும்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமாம் இடர். 77

படையாரும் வாட்கண்ணார் பாரசிநாள் பைம்பூந்
தொடையலோடு ஏந்திய தூபம்—இடையிடையில்
மீன்மாய மாசூணும் வேங்கடமே மேலொருநாள்
மான்மாய வெய்தான் வரை. 82

உளன்கண்டாய் நன்னெஞ்சே! உத்தம னென்றும்
உளன்கண்டாய் உள்ளுவா ருள்ளத்து—உளன்கண்டாய்
வெள்ளத்தி னுள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தி னுள்ளானென்று ஓர். 99

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

# பூதத்தாழ்வார் அருளிச்செய்த இரண்டாந் திருவந்தாதி.

சென்றது இலங்கைமேல் செவ்வேந்தன் சீற்றத்தால்
கொன்றது இராவணனைக் கூறுங்கால்—நின்றதுவும்
வேயோங்கு தண்சாரல் வேங்கடமே விண்ணவர்தம்
வாயோங்கு தொல்புகழான் வந்து. 25

மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான் மற்றும்
நினைப்பரிய நீளரங்கத் துள்ளான்—எனைப்பலரும்
தேவாதி தேவ னெனப்படுவான் முன்னொருநாள்
மாவாய் பிளந்த மகன். 28

துணிந்தது சிந்தை துழாயலங்கல் அங்கம்
அணிந்தவன்பேர் உள்ளத்துப் பல்கால்—பணிந்ததுவும்
வேய்பிறங்கு சாரல் விறல்வேங் கடவனையே
வாய்திறங்கள் சொல்லும் வகை. 33

உளதென் றிறுமாவார் உண்டில்லை யென்று
தளர்த லதனருகுஞ் சாரார்—அளவரிய
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும்
பாதத்தான் பாதம் பயின்று. 45

பயின்றது அரங்கம் திருக்கோட்டி பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே பன்னாள்—பயின்றது
அணிதிகழும் சோலை அணிநீர் மலையே
மணிதிகழும் வண்தடக்கை மால். 46

நெறியாற் குழற்கற்றை முன்னின்று பின்தாழ்ந்து
அறியா திளங்கிரியென் றெண்ணிப்—பிரியாது
பூங்கொடிகள் வைகும் பொருபுனற் குன்றென்னும்
வேங்கடமே யாம்விரும்பும் வெற்பு. 53

வெற்பென் றிருஞ்சோலை வேங்கடமென் றிவ்விரண்டும்
நிற்பென்று நீமதிக்கும் நீர்மைபோல்—நிற்பென்று
உளங்கோயில் உள்ளம்வைத் துள்ளினேன் வெள்ளத்
திளங்கோயில் கைவிடே லென்று. 54

போதறிந்து வானரங்கள் பூஞ்சுனைபுக்கு ஆங்கலர்ந்த
போதரிந்து கொண்டேத்தும் போதுஉள்ளம் !—போது
மணிவேங் கடவன் மலரடிக்கே செல்ல
அணிவேங் கடவன்பேராய்ந்து. 72

பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருக ளிளமூங்கில் வாங்கி—அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங் கடம்கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை. 75

பூதத்தாழ்வார் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ

## பேயாழ்வார் அருளிச்செய்த மூன்றந் திருவந்தாதி.

---

மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு
நூற்பால் மனம்வைக்க நொய்விதாம்—நாற்பால
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும்
பாதத்தான் பாதம் பணிந்து. 14

சிறந்தஎன் சிந்தையும் செங்க ணரவும்
நிறைந்தசீர் நீள்கச்சி யுள்ளும்—உறைந்ததுவும்
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே
தாம்கடவார் தண்துழா யார். 26

சேர்ந்த திருமால் கடல்குடந்தை வேங்கடம்
நேர்ந்தஎன் சிந்தை நிறைவிசும்பு—வாய்ந்த
மறைபா டகம்அனந்தன் வண்துழாய்க் கண்ணி
இறைபாடி யாய இவை. 30

பாற்கடலும் வேங்கடமும் பாம்பும் பனிவிசும்பும்
நூற்கடலும் நுண்ணூல தாமரைமேல்—பாற்பட்
டிருந்தார் மனமும் இடமாகக் கொண்டான்
குருந்தொசித்த கோபால கன். 32

இறையாய் நிலனாகி எத்திசையும் தானாய்
மறையாய் மறைப்பொருளாய் வானாய்ப்—பிறைவாய்ந்த
வெள்ளத் தருவி விளங்கொலிநீர் வேங்கடத்தான்
உள்ளத்தி னுள்ளே உளன். 39

உளன்கண்டாய் நல்நெஞ்சே! உத்தம னென்றும்
உளன்கண்டாய் உள்ளுவா ருள்ளத்து—உளன்கண்டாய்
விண்ணொடுங்கக் கோடுயரும் வீங்கருவி வேங்கடத்தான்
மண்ணொடுங்கத் தானளந்த மண். 40

புரிந்து மதவேழம் மாப்பிடியோடு ஊடித்
திரிந்து சினத்தால் பொருது—விரிந்தசீர்
வெண்கோட்டு முத்துதிர்க்கும் வேங்கடமே மேலொருநாள்
மண்கோட்டுக் கொண்டான் மலை. 45

தெளிந்த சிலாதலத்தின் மேலிருந்த மந்தி
அளிந்த கடுவனையே நோக்கி—விளங்கிய
வெண்மதியம் தாவென்னும் வேங்கடமே மேலொருநாள்
மண்மதியில் கொண்டுகந்தான் வாழ்வு. 58

பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல்—வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை
இளங்குமரன் தன்விண் ணகர். 61

விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர் வேங்கடம்
மண்ணகரம் மாமாட வேளுக்கை—மண்ணகத்த
தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென்கோட்டி
தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு. 62

தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவு மொன்றா இசைந்து 63

பார்த்த கடுவன் சுனைநீர் நிழல்கண்டு
பேர்த்தோர் கடுவ னெனப்பேர்ந்து—கார்த்த
களங்கனிக்குக் கைநீட்டும் வேங்கடமே மேல்நாள்
விளங்கனிக்குக் கன்றெறிந்தான் வெற்பு. 68

வெற்பென்று வேங்கடம் பாடும் வியன்துழாய்
கற்பென்று சூடும் கருங்குழல்மேல்—மல்பொன்ற
நீண்டதோள் மால்கிடந்த நீள்கடல்நீ ராடுவான்
பூண்டநா ளெல்லாம் புகும். 69



3

புகுமதத்தால் வாய்பூசிக் கீழ்தாழ்ந்து அருவி
உகுமதத்தால் கால்கழுவிக் கையால்—மிகுமதத்தேன்
விண்டமலர் கொண்டு விறல்வேங் கடவனையே
கண்டு வணங்கும் களிறு. 70

களிறு முகில்குத்தக் கையெடுத் தோடி
ஒளிறு மருப்பொசிகை யாளி—பிளிறி
விழக்கொன்று நின்றதிரும் வேங்கடமே மேல்நாள்
குழக்கன்று கொண்டெறிந்தான் குன்று. 71

குன்றொன்றி னாய குறமகளிர் கோல்வளைக்கை
சென்று விளையாடும் தீங்கழைபோய்—வென்று
விளங்குமதி கோள்விடுக்கும் வேங்கடமே மேலை
இளங்குமரர் கோமா னிடம். 72

இடம்வலமேழ் பூண்ட இரவித்தே ரோட்டி
வடமுக வேங்கடத்து மன்னும்—குடம்நயந்த
கூத்தனாய் நின்றான் குரைகழலே கூறுவதே
நாத்தன்னா லுள்ள நலம். 73

சார்ந்தகடு தேய்ப்பத் தடாவியகோட் டுச்சிவாய்
ஊர்ந்தியங்கும் வெண்மதியி னொண்முயலைச்—சேர்ந்து
சினவேங்கை பார்க்கும் திருமலையே ஆயன்
புனவேங்கை நாறும் பொருப்பு. 75

முடிந்த பொழுதில் குறவாணர் ஏனம்
படிந்துழுசால் பைந்தினைகள் வித்தத்—தடிந்தெழுந்த
வேய்ங்கழைபோய் விண் திறக்கும் வேங்கடமே மேலொருநாள்
தீங்குழல்வாய் வைத்தான் சிலம்பு. 89

பேயாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

# திருமழிசைப்பிரான் அருளிச்செய்தவை.

## நான்முகன் திருவந்தாதி.

குறிப்பெனக்குக் கோட்டியூர் மேயானை யேத்தக்
குறிப்பெனக்கு நன்மை பயக்க—வெறுப்பனோ?
வேங்கடத்து மேயானை மெய்வினைநோய் எய்தாமல்
தான்கடத்தும் தன்மையான் தாள். 34

அழைப்பன் திருவேங் கடத்தானைக் காண
இழைப்பன் திருக்கூடல் கூட—மழைப்பே
ரருவி மணிவரன்றி வந்திழிய யானை
வெருவி யரவொடுங்கும் வெற்பு. 39

வெற்பென்று வேங்கடம் பாடினேன் வீடாக்கி
நிற்கின்றேன் நின்று நினைக்கின்றேன்—கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்
கால்வலையில் பட்டிருந்தேன் காண். 40

காண லுறுகின்றேன் கல்லருவி முத்துதிர
ஓண விழவி லொலியதிரப்—பேணி
வருவேங் கடவா ! என்னுள்ளம் புகுந்தாய்
திருவேங் கடமதனைச் சென்று. 41

சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை
நின்று வினைகெடுக்கும் நீர்மையால்—என்றும்
கடிக்கமல நான்முகனும் கண்மூன்றத் தானும்
அடிக்கமல மிட்டேத்தும் அங்கு. 42

மங்குல்தோய் சென்னி வடவேங் கடத்தானைக்
கங்குல் புகுந்தார்கள் காப்பணிவான்—திங்கள்
சடையேற வைத்தானும் தாமரைமே லானும்
குடையேறத் தாங்குவித்துக் கொண்டு. 43

கொண்டு குடங்கால்மேல் வைத்த குழவியாய்த்
தண்ட வரக்கன் தலைதாளால்—பண்டெண்ணிப்
போம்குமரன் நிற்கும் பொழில்வேங் கடமலைக்கே
போம்குமர ருள்ளீர் ! புரிந்து. 44

புரிந்து மலரிட்டுப் புண்டரிகப் பாதம்
பரிந்து படுகாடு நிற்பத்—தெரிந்தெங்கும்
தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடமே
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு. 45

வைப்பன் மணிவிளக்கா மாமதியை மாலுக்கென்று
எப்பொழுதும் கைநீட்டும் யானையை—எப்பாடும்
வேடுவளைக் கக்குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே
நாடுவளைத் தாடுமேல் நன்று. 46

நன்மணி வண்ணனூர் ஆளியும் கோளரியும்
பொன்மணியும் முத்தமும் பூமரமும்—பன்மணிநீ
ரோடு பொருதுருளும் கானமும் வானரமும்
வேடு முடைவேங் கடம். 47

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்—வேங்கடமே
தானவரை வீழத்தன் னாழிப் படைதொட்டு
வானவரைக் காப்பான் மலை. 48

வீற்றிருந்து விண்ணாள வேண்டுவார் வேங்கடத்தான்
பால்திருந்த வைத்தாரே பல்மலர்கள்—மேல்திருந்த
வாழ்வார் வருமதிபார்த்து அன்பினராய் மற்றவர்க்கே
தாழ்வா யிருப்பார் தமர். 90

## திருச்சந்த விருத்தம்.

செழுங்கொழும்பெரும்பனி பொழிந்திட உயர்ந்தவேய்
விழுந்துலர்ந்தெழுந்து விண்புடைக்கும்வேங்கடத்துள் நின்று
எழுந்திருந்துதேன்பொருந்து பூம்பொழில்தழைக்கொழுஞ்
செழுந்தடங்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே ? 60
கடைந்துபாற்கடல்கிடந்து காலநேமியைக்கடிந்து
உடைந்தவாலிதன்தனக்கு உதவவந்துஇராமனாய்
மிடைந்தஏழ்மரங்களும் அடங்கவெய்து வேங்கடம்
அடைந்தமாலபாதமே அடைந்துநாளும்உய்ம்மினோ. 81

திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

# நம்மாழ்வார் அருளிச்செய்தவை.

## திருவிருத்தம்.

காண்கின்றனகளும் கேட்கின்றனகளும் காணில்இந்நாள்
பாண்குன்ற நாடர் பயில்கின்றன இதெல்லாம்அறிந்தோம்
மாண்குன்ற மேந்திதண் மாமலை வேங்கடத்து உம்பர்நம்பும்
சேண்குன்றம் சென்று பொருள்படைப் பான்கற்ற திண்ணனவே. 8

மாயோன் வட திருவேங்கட நாட வல்லிக்கொடிகாள்!
நோயோ உரைக்கிலும் கேட்கின்றிலீர் உரையீர் நுமது
வாயோ? அதுவன்றி வல்வினை யேனும் கிளியுமெள்கும்
ஆயோ? அடும்தொண்டையோ? அறையோ! இதறிவரிதே. 10

கயலோ நுமகண்கள்? என்று களிறு வினவிநிற்றீர்
அயலோ ரறியிலும் ஈதென்ன வார்த்தை? கடல்கவர்ந்த
புயலோ டுலாங்கொண்டல் வண்ணன் புனவேங் கடத்தெம்மொடும்
பயலோ விலீர்கொல்லை காக்கின்ற நாளும் பலபலவே. 15

இசைமின்கள் தூதென்று இசைத்தால்இசையிலம் என்தலைமேல்
அசைமின்க ளென்றால் அசையுங்கொலாம்? அம்பொன் மாமணிகள்
திசைமின் மிளிரும் திருவேங் கடத்துவன் தாள்சிமய
மிசைமின் மிளிரிய போவான் வழிக்கொண்ட மேகங்களே! 31

ஒண்ணுதல் மாமை யொளிபய வாமை விரைந்துநந்தேர்
நண்ணுதல் வேண்டும் வலவ! கடாகின்று தேன்நவின்ற
விண்முதல் நாயகன் நீள்முடி வெண்முத்த வாசிகைத்தாய்
மண்முதல் சேர்வுற்று அருவிசெய் யாநிற்கும் மாமலைக்கே. 50

முலையோ முழுமுற்றும் போந்தில மொய்பூங் குழல்குறிய
கலையோ அரையில்லை நாவோ குழறும் கடல்மண்ணெல்லாம்
விலையோ வெனமிளி ரும்கண் இவள்பரமே? பெருமான்
மலையோ திருவேங் கடமென்று கற்கின்ற வாசகமே. 60

காவியும் நீலமும் வேலும் கயலும் பலபலவென்று
ஆவியின் தன்மை அளவல்ல பாரிப்பு அசுரைச்செற்ற
மாவியம் புள்வல்ல மாதவன் கோவிந்தன் வேங்கடம்சேர்
தூவியம் பேடையன் னாள் கண்க ளாய துணைமலரே. 67

உறுகின்ற கன்மங்கள் மேலான ஓர்ப்பில ராய்இவளைப்
பெறுகின்ற தாயார் மெய்ந் நொந்து பெறார்கொல்? துழாய்க்குழல்வாய்த்
துறுகின் றிலர்தொல்லை வேங்கட மாட்டவும் சூழ்கின்றிலர்
இறுகின்ற தால்இவளாகம் மெல்லாவி யெரிகொள்ளவே. 81

# பெரிய திருவந்தாதி.

கல்லும் கனைகடலும் வைகுந்த வானாடும்
புல்லென் றொழிந்தனகொல்? ஏபாவம்! —வெல்ல
நெடியான் நிறம்கரியான் உள்புகுந்து நீங்கான்
அடியேனது உள்ளத் தகம். 68

# திருவாய்மொழி.

கண்ணாவான் என்றும்
மண்ணோர் விண்ணோர்க்கு
தண்ணார் வேங்கட
விண்ணோர் வெற்பனே. 1 ப. 8 தி. 3

எந்தாய்! தண்திருவேங்கடத்துள்நின்றாய்! இலங்கைசெற்றாய் மராமரம்
பைந்தா ளேழுருவ ஒருவாளி கோத்த வில்லா!
கொந்தார் தண்ணந்துழாயினாய்! அமுதே! உன்னைஎன் னுள்ளேகுழைத்தஎம்
மைந்தா! வானேறே! இனிஎங்குப் போகின்றதே? 2 ப. 6 தி. 9

போகின்றகாலங்கள்போயகாலங்கள் போகுகாலங்கள் தாய்தந்தையுயி
ராகின்றாய் உன்னைநான் அடைந்தேன்விடுவேனோ? .
பாகின்ற தொல்புகழ் மூவுலகுக்கும் நாதனே! பரமா! தண்வேங்கடம்
மேகின்றாய்! தண்துழாய் விரைநாறு கண்ணியனே! 2 ப. 6 தி. 10

பற்ப நாபன் உயர்வற வுயரும் பெருந்திறலோன்
எற்பரன் என்னையாக்கிக்கொண்டு எனக்கேதன்னைத்தந்த
கற்பகம் என்அமுதம் கார்முகில் போலும் வேங்கடநல்
வெற்பன் விசும்போர்பிரான் எந்தைதாமோதரனே. 2 ப. 7 தி. 11

வார்புன லந்தணருவி வடதிரு வேங்கடத் தெந்தை
பேர்பல சொல்லிப்பிதற்றிப் பித்தரென்றேபிறர்கூற
ஊர்பல புக்கும் புகாதும் உலோகர் சிரிக்கநின்றாடி
ஆர்வம் பெருகிக் குனிப்பார் அமரர் தொழப்படுவாரே. 3 ப. 5 தி. 8

சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ
என்னாவி லின்கவி யானொருவர்க்கும் கொடுக்கிலேன்
தென்னா தெனாவென்று வண்டுமுரல் திருவேங்கடத்து
என்னானை என்னப்பன் எம்பெருமான் உளனாகவே. 3 ப. 9 தி. 1

மாரிமாறாததண்ணம்மலை வேங்கடத்தண்ணலை
வாரிமாறாதபைம்பூம்பொழில்சூழ் குருகூர்நகர்
காரிமாறன்சடகோபன் சொல்லாயிரத்துஇப்பத்தால்
வேரிமாறாதபூமேலிருப்பாள் வினைதீர்க்குமே. 4 ப. 5 தி. 11

கட்டெழில்சோலை நல்வேங்கடவாணனைக்
கட்டெழில்தென்குருகூர்ச் சடகோபன்சொல்
கட்டெழிலாயிரத்து இப்பத்தும்வல்லவர்
கட்டெழில்வானவர் போகமுண்பாரே. 6 ப. 6 தி. 11

விண்மீதிருப்பாய்! மலைமேல்நிற்பாய்! கடற்சேர்ப்பாய்!
மண்மீதுழல்வாய்! இவற்றுளெங்கும்மறைந்துறைவாய்!
எண்மீதியன்ற புறவண்டத்தாய்! எனதாவி
உள்மீதாடி உருக்காட்டாதே ஒளிப்பாயோ? 6 ப. 9 தி. 5

நங்கள்வரிவளையாயங்காளோ!
நம்முடையேதலர்முன்புநாணி
நுங்கட்குயானொன்றுரைக்கும்மாற்றம்
நோக்குகின்றேன்எங்கும்காணமாட்டேன்
சங்கம்சரிந்தனசாயிழந்தேன்
தடமுலைபொன்னிறமாய்த்தளர்ந்தேன்
வெங்கண்பறவையின்பாகன்எங்கோன்
வேங்கடவாணனைவேண்டிச்சென்றே. 8 ப. 2 தி. 1

இன்றிப்போக இருவினையும்கெடுத்து
ஒன்றியாக்கைபுகாமை உய்யக்கொள்வான்
நின்றவேங்கடம் நீள்நிலத்துஉள்ளது
சென்றுதேவர்கள் கைதொழுவார்களே. 9 ப. 3 இ. 9

மேயான்வேங்கடம்
காயாமலர்வண்ணன்
பேயார்முலையுண்ட
வாயான்மாதவனே. 10 ப. 5 இ. 6

திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலேஎன்தலையே
திருமால்வைகுந்தமே தண்திருவேங்கடமேஎனதுடலே
அருமாமாயத்துஎனதுயிரே மனமேவாக்கேகருமமே
ஒருமாகொடியும்பிரியான் எனதூழிமுதல்வன்ஒருவனே. 10 ப. 7 இ. 8

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

# பெரியாழ்வார் திருமொழி.

சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதி பரந்தெங்கும்
எத்தனை செய்யினும் என்மகன் முகம்நே ரொவ்வாய்
வித்தகன் வேங்கட வாணன் உன்னை விளிக்கின்ற
கைத்தலம் நோவாமே அம்புலீ! கடிதோடிவா. 1 ப. 4 தி. 3

என்னிது மாயம்? என்னப்பன் அறிந்திலன்
முன்னைய வண்ணமே கொண்டு அளவாயென்ன
மன்னு நமுசியை வானில் சுழற்றிய
மின்னுமுடியனே! அச்சோவச்சோ
வேங்கடவாணனே! அச்சோவச்சோ. 1 ப. 9 தி. 8

தென்னிலங்கை மன்னன் சிரம்தோள் துணிசெய்து
மின்னிலங்குபூண் விபீடண நம்பிக்கு
உன்னிலங்கு நாமத் தளவும் அரசென்ற
மின்னலங்காரற்கு ஓர்கோல் கொண்டுவா
வேங்கட வாணற்கு ஓர்கோல் கொண்டுவா. 2 ப. 6 தி. 9

மச்சொடு மாளிகை யேறி மாதர்கள் தம்மிடம் புக்குக்
கச்சொடு பட்டைக் கிழித்துக் காம்பு துகிலவை கீறி
நிச்சலும் தீமைகள் செய்வாய்! நீள்திரு வேங்கடத்து எந்தாய்!
பச்சைத் தமனகத் தோடு பாதிரிப் பூச்சூட்ட வாராய். 2 ப. 7 தி. 3

போதர்கண்டாய்இங்கேபோதர்கண்டாய்
போதரேனென்னாதேபோதர்கண்டாய்
ஏதேனும்சொல்லிஅசலகத்தார்
ஏதேனும்பேசநான்கேட்கமாட்டேன்
கோதுகலமுடைக்குட்டனேயோ!
குன்றெடுத்தாய்! குடமாடு கூத்தா!
வேதப்பொருளே! என்வேங்கடவா!
வித்தகனே! இங்கேபோதராயே. 2 ப. 9 தி. 6

கடியார் பொழிலணி வேங்கடவா! கரும்போரேறே! நீயுகக்கும்
குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக் கொள்ளாதே போனாய்மாலே!
கடியவெங்கானிடைக்கன்றின்பின்போன சிறுக்குட்டச்செங்கமல
அடியும்வெதும்பி உன்கண்கள்சிவந்தாய் அசைந்திட்டாய்நீ எம்பிரான்!
3 ப. 3 தி. 4

சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையாய்! உலகு
தன்னைவாழநின்றநம்பீ! தாமோதரா! சதிரா!
என்னையும்என்னுடைமையும் உன்சக்கரப்பொறியொற்றிக்கொண்டு
நின்னருளேபுரிந்திருந்தேன் இனிஎன்திருக்குறிப்பே? 5 ப. 4 தி. 1

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

## ஆண்டாள் அருளிச்செய்த நாச்சியார் திருமொழி.

தையொரு திங்களும் தரைவிளக்கித்
 தண்மண்டலமிட்டு மாசிமுன்னாள்
ஐயநுண் மணற்கொண்டு தெருவணிந்து
 அழகினுக் கலங்கரித்து அனங்கதேவா!
உய்யவு மாங்கொலோ வென்றுசொல்லி
 உன்னையும் உம்பியையும் தொழுதேன்
வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை
 வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே. 1 தி. 1

மத்தநன் னறுமலர் முருக்க மலர்கொண்டு
முப்போதும் உன்னடி வணங்கி
தத்துவ மிலியென்று நெஞ்செரிந்து
வாசகத் தழித்து உன்னை வைதிடாமே
கொத்தலர் பூங்கணை தொடுத்துக்கொண்டு
கோவிந்த னென்பதோர் பேரெழுதி
வித்தகன் வேங்கட வாணனென்னும்
விளக்கினில் புகஎன்னை விதிக்கிற்றியே. 1 தி. 3

காட்டில் வேங்கடம் கண்ண புரநகர்
வாட்ட மின்றி மகிழ்ந்துறை வாமனன்
ஓட்டரா வந்து என் கைப்பற்றித் தன்னொடும்
கூட்டு மாகில் நீ கூடிடு கூடலே! 4 து. 2

வெள்ளை விளிசங்கு இடங்கையில் கொண்ட
விமலன் எனக்கு உருக்காட்டான்
[redacted] புகுந்து என்னைநைவித்து
நாளும்உயிர்பெய்து கூத்தாட்டுக்காணும்

கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக்
களித்திசை பாடும் குயிலே!
மெள்ள விருந்து மிழற்றி மிழற்றாதென்
வேங்கட வன்வரக் கூவாய். 5 தி. 2

பாடும் குயில்காள்! ஈதுஎன்ன பாடல்? நல்வேங்கட
நாடர்நமக்குஒருவாழ்வு தந்தால் வந்துபாடுமின்
ஆடும் கருளக் கொடியுடையார் வந்துஅருள்செய்து
கூடுவாராயிடில் கூவிநம் பாட்டுக்கள் கேட்டுமே. 10 தி. 5

மழையே! மழையே! மண்புறம்பூசி உள்ளாய் நின்று
மெழுகூற்றினாற்போல் ஊற்றுநல்வேங்கடத்துள்நின்ற
அழகப் பிரானார்தம்மை என்னெஞ்சத்தகப்படத்
தழுவிநின்று என்னைத்ததைத்துக்கொண்டு ஊற்றவும் வல்லையே?
10 தி. 8

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

# திருப்பாணாழ்வார் அருளிச்செய்த அமலனாதிபிரான்

அமலனாதிபிரான் அடியார்க்கென்னையாட்படுத்த
விமலன் விண்ணவர்கோன் விரையார்பொழில்வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிளரங்கத்தம்மான் திருக்
கமலபாதம்வந்து என்கண்ணினுள்ளனவொக்கின்றதே. 1

மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள்
சந்திசெய்யநின்றான் அரங்கத்தரவினணையான்
அந்திபோல்நிறத்தாடையும் அதன்மேலயனைப்படைத்ததோரெழில்
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே. 3

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி.

அன்றிய வாண னாயிரம் தோளும்
    துணிய அன்று ஆழிதொட்டானை
மின்திகழ் குடுமி வேங்கட மலைமேல்
    மேவிய வேதநல் விளக்கை
தென்திசைத் திலத மனையவர் நாங்கைச்
    செம்பொன்செய் கோயிலி னுள்ளே
மன்றது பொலிய மகிழ்ந்துநின் றானை
    வணங்கிநான் வாழ்ந்தொழிந்தேனே. 4 ப. 3 தி. 8

வேடார்திருவேங்கடம் மேயவிளக்கே!
நாடார்புகழ் வேதியர்மன்னியநாங்கூர்
சேடார்பொழில்சூழ் திருவெள்ளக்குளத்தாய்!
பாடாவருவேன் வினையாயினபாற்றே. 4-7 தி. 5

வாம்பரியுகமன்னர்தம்உயிர்செக ஐவர்கட்குஅரசளித்த
காம்பினார்திருவேங்கடப்பொருப்ப! நின்காதலைஅருள்எனக்கு
மாம்பொழில்தளிர்கோதியமடக்குயில் வாயது துவர்ப்பெய்தத்
தீம்பலங்கனித்தேனது நுகர் திருவெள்ளறைநின்றானே! 5 ப. 3 தி. 4

வெருவாதாள்வாய்வெருவி
வேங்கடமே! வேங்கடமே! என்கின்றாளால்
மருவாளால்என்குடங்கால் வாள்நெடுங்கண்
துயில்மறந்தாள் வண்டார்கொண்ட
லுருவாளன்வானவர்தமுயிராளன்
ஒலிதிரைநீர்ப்பௌவம்கொண்ட
திருவாளன் என்மகளைச்செய்தனகள்
எங்ஙனம்நான் சிந்திக்கேனே? 5 ப. 5 தி. 1

சிந்தனையைத்தவநெறியைத் திருமாலை பிரியாது
வந்துஎன்மனத்துஇருந்த வடமலையை வரிவண்டார்
கொந்தணைந்தபொழிற்கோவல் உலகளப்பான் அடிநிமிர்த்த
அந்தணனை யான்கண்டது அணிநீர்த்தென்னரங்கத்தே. 5 ப. 6 தி. 7

மான்கொண்டதோல்மார்வின் மாணியாய் மாவலிமண்
தான்கொண்டு தாளாலளந்தபெருமானைத்
தேன்கொண்டசாரல் திருவேங்கடத்தானை
நான்சென்றுநாடி நறையூரில்கண்டேனே. 6 ப. 8 தி. 1

ஆங்குவெந்நரகத்துஅழுந்தும்போது
அஞ்சேலென்றுஅடியேனைஅங்கேவந்து
தாங்கு தாமரையன்னபொன்னாரடி
எம்பிரானை உம்பர்க்கணியாய்நின்ற
வேங்கடத்தரியைப்பரிகீறியை
வெண்ணெயுண்டுஉரலினிடையாப்புண்ட
தீங்கரும்பினைத் தேனைநன்பாலினையன்றி
என்மனம்சிந்தைசெய்யாதே. 7 ப. 3 தி. 5

எங்களுக்குஅருள்செய்கின்றஈசனை
வாசவார்குழலாள்மலைமங்கைதன்
பங்கனைப் பங்கில்வைத்துகந்தான்தன்னைப்
பான்மையைப்பனிமாமதியம்தவழ்

மங்குலைச்சுடரைவடமாமலை
யுச்சியை நச்சிநாம்வணங்கப்படும்
கங்குலைப் பகலைச்சென்றுநாடிக்
கண்ணமங்கையுள்கண்டுகொண்டேனே. 7 ப. 10 தி. 3

அருவிசோர்வேங்கடம் நீர்மலையென்றுவாய்
வெருவினாள் மெய்யம்வினவியிருக்கின்றாள்
பெருகுசீர்க் கண்ணபுரமென்றுபேசினாள்
உருகினாள் உள்மெலிந்தாள் இதுஎன்கொலோ? 8 ப. [illegible] தி. 3

பண்ணுலாமென்மொழிப்பாவைமார் பணைமுலையணைதும்நாமென்று
எண்ணுவாரெண்ணமதொழித்து நீபிழைத்துயக்கருதினையேல்
விண்ணுளார்விண்ணின்மீதியன்ற வேங்கடத்துளார் வளங்கொள்முந்நீர்
வண்ணனார்வல்லவாழ் சொல்லுமாவல்லையாய்மருவுநெஞ்சே! 9 ப. 7 தி. 4

வலம்புரியாழியனை வரையார்திரள்தோளன்தன்னைப்
புலம்புரிநூலவனைப் பொழில்வேங்கடவேதியனைச்
சிலம்பியலாறுடைய திருமாலிருஞ்சோலைநின்ற
நலந்திகழ்நாரணனை நணுகுங்கொல்? என்நன்னுதலே. 9 ப. 9 தி. 9

பொன்னைமாமணியை அணியார்ந்ததோர்
மின்னை வேங்கடத்துஉச்சியிற் கண்டுபோய்
என்னையாளுடையஈசனை எம்பிரான்
தன்னையாம்சென்றுகாண்டும் தண்காவிலே. 10 ப. 1 தி. 2

சொல்லாய் பைங்கிளியே!
சுடராழி வலனுயர்த்த
மல்லார்தோள் வடவேங்கடவனைவரச்
சொல்லாய் பைங்கிளியே. 10 ப. 10 தி. 5

கண்ணன்மனத்துள்ளேநிற்கவும் கைவளைகள்
என்னேகழன்ற? இவைஎன்னமாயங்கள்?
பெண்ணானோம் பெண்மையோம்நிற்க அவன்மேய
அண்ணல்மலையும் அரங்கமும்பாடோமே. 11 ப. 3 தி. 7

கள்ளத்தால்மாவலியை மூவடிமண்கொண்டளந்தான்
வெள்ளத்தான்வேங்கடத்தான் என்பால்காணேடீ!
வெள்ளத்தான் வேங்கடத்தானேனும் கலிகன்றி
உள்ளத்தினுள்ளே உளன்கண்டாய்சாழலே! 11 ப. 5 தி. 10

## திருக்குறுந்தாண்டகம்.

இம்மையை மறுமை தன்னை எமக்குவீ டாகி நின்ற
மெய்ம்மையை விரிந்த சோலை வியன்திரு வரங்கம் மேய
செம்மையைக் கருமை தன்னைத் திருமலை யொருமை யானைத்
தன்மையை நினைவார் என்தன் தலைமிசை மன்னு வாரே. 7

## திருநெடுந்தாண்டகம்.

நீரகத்தாய் நெடுவரையி னுச்சி மேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய்! ஒண்துறைநீர் வெஃகா வுள்ளாய்!
உள்ளுவா ருள்ளத்தாய்! உலக மேத்தும்
காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்! பேராதென் னெஞ்சி னுள்ளாய்!
பெருமான்! உன் திருவடியே பேணி னேனே. 8

வங்கத்தால் மாமணிவந் தந்து முந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சி யூராய்! பேராய்!
கொங்கத்தார் வளங்கொன்றை யலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான்
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!
பனிவரையி னுச்சியாய்! பவள வண்ணா!
எங்குற்றாய்? எம்பெருமான்! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதருகேனே. 9

கன்றுமேய்த்து இனிதுகந்த காளாய்! என்றும்
கடிபொழில்சூழ் கணபுரத்தென் கனியே! என்றும்
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய்! என்றும்
வடதிருவேங் கடமேய மைந்தா! என்றும்
வென்றசுரர் குலங்களைந்த வேந்தே! என்றும்
விரிபொழில்சூழ் திருநறையூர் நின்றாய்! என்றும்
துன்றுகுழல் கருநிறத்தென் துணையே! என்றும்
துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின் றாளே. 16

## சிறிய திருமடல்.

.................................................................

சீரார்திருவேங்கடமே.................................................. 69

## பெரிய திருமடல்.

.................................................................

தென்ன னுயர்பொருப்பும் தெய்வ வடமலையும். 6

.................................................................

மின்னி மழைதவழும் வேங்கடத்துளம் வித்தகனே. 124

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

## திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த இராமானுசநூற்றந்தாதி.

நின்றவண் கீர்த்தியும் நீள்புன லும்நிறை வேங்கடப்பொற்
குன்றமும் வைகுந்த நாடும் குலவிய பாற்கடலும்
உன்தனக்கு எத்தனை யின்பந் தரும்உன் னிணைமலர்த்தாள்
என்தனக் கும்அது இராமா னுசஇவை யீந்தருளே. 76

இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ் சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக் கென்பர்நல் லோர்அவை தம்மொடும்வந்து
இருப்பிடம் மாயன் இராமானுசன்மனத் துஇன்றுஅவன்வந்து
இருப்பிடம் என்தனி தயத்துள்ளே தனக்கின்புறவே. 106

திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

## ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்தது.

கண்ணனடி யிணையெமக்குக் காட்டும் வெற்பு
கடுவினைய ரிருவினையும் கடியும் வெற்பு
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு
தெளிந்தபெருந் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு
புண்ணியத்தின் புகலிதென்னப் புகழும் வெற்பு
பொன்னுலகில் போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கடவெற் பெனவிளங்கும் வேத வெற்பே. (அதிகாரஸங்க்ரஹம்-43)

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

|| தயாஶதகம் ||

ப்ரபத்யே தம் கிரிம் ப்ராய: ஸ்ரீநிவாஸாநுகம்பயா ।
இக்ஷுஸாரஸ்ரவந்த்யேவ யந்மூர்த்யா ஶர்க்கராயிதம் ॥ 1

ஸமஸ்தஜனனீம்வந்தே சைதந்யஸ்தந்யதாயினீம் ।
ஶ்ரேயஸீம் ஸ்ரீநிவாஸஸ்ய கருணாமிவ ரூபிணீம் ॥ 6

கமப்யநவதிம் வந்தே கருணாவருணாலயம் ।
வ்ர்ஷஶைல தடஸ்தாநாம் ஸ்வயம் வ்யக்திமுபாகதம் ॥ 9

அஹமஸ்ம்யபராதசக்ரவர்த்தீ
கருணே த்வம்ச குணேஷு ஸார்வபௌமீ ।
விதுஷீ ஸ்திதிமீத்ருஶீம் ஸ்வயம் மாம்
வ்ர்ஷஶைலேஶ்வரபாதஸாத்குரு த்வம் ॥ 30

திவ்யாபாங்கம் திஶஸிகருணே யேஷு ஸத்தேஶிகாத்மா
க்ஷிப்ரம் ப்ராப்தா வ்ர்ஷகிரிபதிம் க்ஷத்ரபந்த்வாதயஸ்தே ।
விஶ்வாசார்யா: விதிஶிவமுகா: ஸ்வாதிகாரோபருத்தா:
மந்யே மாதா ஜட இவ ஸுதே வத்ஸலா, மாத்ருஶே த்வம் ॥ 59

நிஷாதாநாம் நேதா கபிகுலபதி: காபி ஶபரீ
குசேல: குப்ஜா ஸா வ்ரஜயுவதயோ மால்யக்ருதிதி ।
அமீஷாம் நிம்நத்வம் வர்ஷகிரிபதே ருந்ததியபி
ப்ரஹ்லாதை: ஸ்ரோதோபி: ப்ரஸமநுகம்பே ஹிமயஸி ॥ 65

ஔத்ஸுக்யபூர்வமுபஹ்ருத்ய மஹாபராதான்
மாத: ப்ரஸாதயிதுமிச்சதி மே மநஸ்த்வாம் ।
ஆலிஹ்யதாம் நிரவஶேஷமலப்யத்ருப்தி:
தாம்யஸ்யஹோ வ்ர்ஷகிரீஶ தயார்த்ர தயே த்வம் ॥ 98
நாத: பரம் கிமபி மே த்வயி நாதநீயம்
மாதர் தயே மயி குருஷ்வ ததா ப்ரஸாதம் ।
பத்தாதரோ வ்ர்ஷகிரிப்ரணயீ யதாஸௌ
முக்தாநுபந்தமிஹ தாஸ்யதி மே முகுந்த: 100

ப்ரஶமிதகலிதோஷாம் ப்ராஜ்யபோகாநுபந்தாம்,
ஸமுதிதகுணஜாதாம் ஸம்யமாசாரயுக்தாம் ।
ஶ்ரிதஜநபஹுமாந்யாம் ஶ்ரேயஸீம் வேங்கடாத்ரௌ
ஶ்ரியமுபசிநு நித்யம் ஶ்ரீநிவாஸ த்வமேவ ॥